# பணத்தைச் சேமித்தல்

## உங்கள் பணத்தை நிர்வகித்தல் மெய்த்தகவல் தாள்



## பணத்தைச் சேமிப்பது ஒரு நல்ல சிந்தனை என்பது ஏன்?

மக்கள் பணம் சேமிக்கிறார்கள். ஏனென்றால் எதிர்காலத்தில் அவர்கள் ஏதாவது வாங்கவோ (சேமிப்பு இலக்கு) அல்லது ஏதாவது தவறாகப் போய்விடும்போது (அவசரகாலப் பணம்) பணம் இருக்க வேண்டுமெனவோ விரும்புகின்றனர்.

நான் எப்படிச் சேமிக்க ஆரம்பிக்க வேண்டும்? பின்வரும் இக்கேள்விகளை நீங்களே உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள்:

- நான் எதற்காகச் சேமிக்க விரும்புகிறேன்?
- எவ்வளவு பணம் நான் சேமிக்க வேண்டும்?
- ஒவ்வொரு முறை நான் சம்பளம் வாங்கும்போதும் எவ்வளவு நான் சேமிக்க வேண்டும்?
- என்னுடைய இலக்கை அடைய எனக்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

## உங்கள் சேமிப்பு இலக்கை அடையும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்

நீங்கள் பணத்தைச் சேமிக்க ஆரம்பித்தவுடன், உங்கள் சேமிப்பை வங்கியிலோ, கிரெடிட் யூனியனிலோ அல்லது கட்டுமானக் கழகத்திலோ போட்டு விடுங்கள் (அதனால் உங்கள் சேமிப்பு இலக்குப் பணத்தை மற்ற தேவைகளுக்கு நீங்கள் பயன்படுத்த மாட்டீர்கள்)

## நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

- பணம் சேமிப்பது என்பது எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கெனச் சிறிது பணத்தைத் தனியே எடுத்து வைப்பதாகும்.
- அதிகச் செலவாகும் தேவைகளைச் சமாளிக்கச் சேமிக்கும் பணம் உங்களுக்கு உதவுகிறது
- உடனடிச் செலவுகள் அல்லது எதிர்பாராத செலவினங்கள் நேரும்போது சேமித்த பணம் உங்களுக்கு உதவுகிறது

## உதவி மற்றும் மேலதிகத் தகவல்களை எங்கே பெறலாம்

பணம் சேமிப்பதைப் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, MoneySmart இணையதளமான **www.moneysmart.gov.au** என்ற முகவரிக்குச் செல்லுங்கள் அல்லது சென்டர்லிங்க் நிதித் தகவல் சேவை அலுவலரை 13 23 00 பணம் என்ற எண்ணில் அழைத்து உங்கள் சேமிப்புத் திட்டத்தை உருவாக்க உதவி பெறுங்கள்.

### பிரான் அவசரத் தேவைகளுக்கு சேமிப்பைத் தொடங்குகிறார்

பிரான் இரண்டு இளம் குழந்தைகளுடன் தனியே வாழும் தாய். அவர் ஓர் அலுவலகத்தில் வரவேற்பாளராகப் பகுதி நேர வேலை பார்க்கிறார். அவர் உணவுக்கும், பில்களுக்கும் தேவையான பணத்தைத் தன் பணப்பையில் வைத்திருக்கிறார். ஆனால் அதைச் செலுத்துவதற்குத் தேவையான அளவு பணம் இல்லாமல் போய்விட்டால் ஏதாவது தீர்வு காணப்படவேண்டுமே என அடிக்கடிக் கவலைப்படுகிறார்.

பிரான் ஒரு வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்க முடிவு செய்கிறார். அவர் ஓர் இரவில் அமர்ந்து, தன்னுடைய வருமானம் மற்றும் செலவுகளை எழுதுகிறார்.

தன்னுடைய எல்லா பில்களையும் செலுத்தியபின்னர் மீதிப்பணம் அதிக அளவு இல்லை என்றாலும், ஓரளவு பணத்தைச் சேமிக்க பிரான் முடிவு செய்கிறார். அவர் வேலை பார்க்கும்போது வாரத்துக்கு 3 காபி வாங்கிக் குடிக்க வேண்டிய தேவையில்லையென முடிவு செய்கிறார். வாரத்துக்கு ஒரு காபி மட்டும் வாங்கினால், அவர் வாரத்துக்கு 10 டாலர்கள் சேமிக்க முடியும். இது கடினமாக இருக்கக்கூடும், ஆயினும் முயன்று பார்க்கலாம் என்று பிரான் நினைக்கிறார்.

முதல் வாரத்தில் பிரான் காபியை இரண்டாகக் குறைத்துள்ளார். அதன்பின் வரும் வாரங்களில் ஒரே ஒரு காபி வாங்குவதை வழக்கப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு வாரமும் பிரான் தன்னுடைய சேமிப்புக் கணக்கு வளர்ந்து கொண்டே போவதைப் பார்க்க முடிகிறது. அது அவரை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

அவசரத் தேவைகளுக்காக வாரத்துக்கு 10 டாலர்கள் சேமிப்புக் கணக்கில் போட பிரான் முடிவெடுக்கிறார். இவ்வகையில் திடீரெனச் செலுத்த வேண்டிய எதிர்பாராத செலவுகளை ஈடுசெய்யத் தேவையான பணம் அவருக்குக் கிடைக்கும்.

அவசரத் தேவைகளுக்கென சேமிப்புக் கணக்கு தொடங்கி மூன்று மாதங்களுக்குப் பிறகு, பிரானுடைய கார் பேட்டரி வேலை செய்யாமல் போனதால் புதிய பேட்டரி தேவைப்பட்டது. கடந்த காலங்களில் அவருக்கு புதிய பேட்டரி வாங்கத் தேவையான பணம் இருந்ததில்லை. தற்போது பிரான் அவசரத் தேவைக்கென 120 டாலர்கள் தன்னுடைய சேமிப்புக் கணக்கில் வைத்திருப்பதால், 90 டாலர்கள் விலையுள்ள ஒரு புதிய பேட்டரி உடனடியாக வாங்க முடியும். அவசரத் தேவைகளுக்கென தன்னுடைய சேமிப்புக் கணக்கில் தேவையான பணம் வைத்திருந்தபடியால் இதை அவரால் செய்ய முடிந்திருக்கிறது.

MONEYSMART

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

This page has been intentionally left blank.

© ASIC 2012 அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை